SALZER ELECTRONICS LTD

Regd. Office : Samichettipalayam, Jothipuram (Post)
Coimbatore -641 047. CIN : L03210TZ1985PLC001535
Phone No.0422-4233600/ 614/696
E-Mail : baskarasubramanian@salzergroup.com
web site : https://www.salzergroup.net/

June 21, 2021

To

THE CORPORATE RELATIONSHIP DEPT
M/s.BSE Limited
I Floor, New Trading Ring,
Rotunda Building,
P.J.Towers, Dalal Street,
Fort, Mumbai - 400 001.

SCRIP CODE: 517059

M/s. NATIONAL STOCK EXCHANGE OF INDIA LTD.,
Exchange Plaza, C-1, Block G,
Bandra Kurla Complex,
Bandra (E),Mumbai – 400 051
Tel :+91 22 26598235/36, 26598346
Fax : +91 22 26598237/38

Symbol: **SALZERELEC**

Dear Sir,

Sub: Information pursuant to Regulations 47(1d) of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (Listing Regulations).

Pursuant to Regulation 46 & 47(1d) of SEBI (LODR), we enclosed herewith the paper clippings of our Advertisement published in Tamil & English Daily, the Audited Financial Result for the fourth quarter / year ended 31.03.2021. The same is being posted in the Company's website.

Kindly acknowledge the receipt.

Thanking you,

Yours faithfully,
For SALZER ELECTRONICS LIMITED

SANKARAN BASKARASUBRAMANIAN

Digitally signed by SANKARAN BASKARASUBRAMANIAN
Date: 2021.06.21 15:56:03 +05'30'

DIRECTOR (CORPORATE AFFAIRS)
& COMPANY SECRETARY

Encl : as above

RBI turns net buyer of US dollar in April, purchases $4.212 billion

The Reserve Bank of India (RBI) turned net buyer of the US currency in April after it purchased $4.212 billion from the spot market on a net basis, according to the central bank data. During the month, while the RBI bought $8.182 billion from the spot market, it sold $3.97 billion, the monthly RBI bulletin for June 2021, released on Wednesday, showed. In March this year, the central bank had net sold $5.699 billion of the US currency. —PTI

SIP asset base hits all-time high at ₹4.67L cr in May

PRESS TRUST OF INDIA
New Delhi, June 16



THE INVESTOR INTEREST in the mutual fund industry as an avenue to generate long-term wealth creation is rising with SIP's asset base touching an all-time high of ₹4.67 lakh crore at May-end.

Over the past five years, the systematic investment plan or SIP AUM has grown 30% annually, twice as fast as the growth in the overall mutual fund industry's assets under management (AUM).

According to data released by the Association of Mutual Funds in India (Amfi) on Wednesday, SIP AUMs have seen a close to four-fold jump to ₹4,67,366 crore as of May this year, from ₹1,25,394 crore as of August 2016.

The annual mutual fund SIP contribution too has seen a more than two-fold rise during the past five years to ₹96,080 crore in 2020-21, from ₹43,921 crore during 2016-17.

Also, monthly SIP contribution has witnessed a healthy growth of 2.52 times to ₹8,819 crore as of May 2021, compared to ₹3,497 crore in August 2016.

In FY22, alone, for the first five months, SIPs have contributed ₹42,148 crore. Retail Investor interest towards MF asset class has seen a meteoric rise as SIP accounts in the the last five years jumped almost four times to 3.88 crore in May 2021, from 1 crore as of April 2016.

The number of new SIPs registered on a month-on-month basis has seen an almost three-fold jump in May.

'Increasingly, small savers have realised that with bank interest rates on a declining curve for last few years, inflation-adjusted superior qualitative returns over the longer term, could come only from the mutual fund asset class. Hence the rising affinity towards MF asset class, especially through the SIP route," NS Venkatesh, chief executive, Amfi, said.

Shyam Metalics IPO closes with 121.40 times subscription

PRESS TRUST OF INDIA
New Delhi, June 16

THE INITIAL PUBLIC offering of Shyam Metalics and Energy closed with a subscription of 121.40 times on Wednesday. It received bids for 2,56,05,35,955 shares against 2,10,90,890 shares on offer, according to NSE data.

The qualified Institutional Buyers(QIBs) category was subscribed 155.71 times, non-institutional investors 339.98 times, and retail individual investors(RIIs) 11.58 times.

Sona Comstar IPO subscribed 2.28 times

THE IPO OF auto component maker Sona BLW Precision Forgings was subscribed 2.28 times on the last day of subscription on Wednesday. The IPO received bids for 24,43,02,138 shares against 10,71,05,262 shares on offer, according to an update on the NSE. The portion meant for QIBs was subscribed 3.46 times, non-institutional investors 39%, and retail individual investors 1.57 times. —PTI

ICICI Bank launches holistic digital offerings for corporate ecosystem

FE BUREAU
Mumbai, June 16

ICICI BANK ON Wednesday launched a set of banking solutions for corporates and their entire ecosystem, including promoters, group companies, employees, dealers, vendors and other stakeholders.

Terming it as 'ICICI STACK', the bank said it would provide customised digital banking services to companies in over 15 sectors such as financial services, IT/ITeS, pharmaceuticals, steel and their entire ecosystem. The bank has opened eight ecosystem branches for this initiative in order to supplement its digital efforts. The lender plans to launch another four branches in FY22.

Vishakha Mulye, executive director, said, "With an objective to cater to the ecosystem of every corporate, we have launched a digital 'ICICI Stack for Corporates' with many industry-first features. We look forward to partnering with our customers for the banking needs of their entire ecosystem and unlock full potential."

The lender said corporates were slower in adopting digital solutions compared to the retail segment, and added that the solution focused on tech-based new age offerings. Underlining the importance of the ecosystem approach it has taken, Mulye said corporates needed a trusted partner who would hand-hold and help manage the business holistically.

"Availing credit for a reasonably good corporate is not an issue today. We are sitting on excess liquidity, credit demand is not much," Mulye said.

தூத்துக்குடி மாவட்ட கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டப்பணிகள் (ரூ10கோடிக்கு மேல்) கண்காணிப்பு அலுவலர்/தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் பிரகாஷ் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் தூத்துக்குடி மாநகராட்சி என்.எச்.45 மீளவிட்டான் பகுதியில் ரூ.69.66 கோடி மதிப்பீட்டில் வெள்ள நீர் வடிகால் அமைக்கும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று முதல் ஜமாபந்தி

கிருஷ்ணகிரி, ஜூன் 16

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று (16ம் தேதி) முதல் ஜமாபந்தி நடைபெறவுள்ளதால், இணையவழியாக பொதுமக்கள் மனு அளிக்கலாம் என மாவட்ட கலெக்டர் ஜெயசந்திரபானு ரெட்டி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, பர்கூர், போச்சம்பள்ளி, ஓசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை மற்றும் அஞ்செட்டி ஆகிய 8 வட்டங்களில் இன்று (16ம் தேதி) முதல் ஜமாபந்தி நடைபெறவுள்ளது. தற்போது தொற்று நோய் காலம் என்பதால் பொதுமக்களின் நலன் கருதி ஜமாபந்தி அலுவலர்களிடம் நேரடியாக மனு அளிக்காமல், <https://gdp.tn.gov.in/jamabandhi/> என்கிற இணையவழியில் பொதுமக்கள் சுயமாக மனு செய்துக்கொள்ளலாம். மேலும், அரசு விதித்துள்ள விதிமுறைகளான முககவசம் அணிதல், சமூக இடைவெளி கடைபிடித்து அரசு இ-சேவை மையம் மூலமாகவும் இணைய வழியில் வருகிற ஜூலை 31ம் தேதி வரை மனுக்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

பொதுமக்களின் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடி தீர்வு காணப்படும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் ஜெயசந்திரபானு ரெட்டி தெரிவித்துள்ளார்.

தலையங்கம்

பிற்பகல்

விரும்பத்தகாத நிகழ்வுகளுக்குத் தான் வழி ஏற்பட வாய்ப்பு!

கடுமையான எதிர்ப்பு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக நாடு முழுவதும் 75 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கு மத்திய அரசு ஏல அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வட தெரு கிராமமும் உண்டு. ஆனால் இந்தப் பகுதியில் ஹைட்ரோ கார்பன் எடுக்க அனுமதிக்கமாட்டோம் என்று விவசாயிகள் மீண்டும் போராடத் தொடங்கி இருக்கிறார்கள். தமிழக அரசின் முடிவையும் முதல் அமைச்சர் ஸ்டாலின் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

ஹைட்ரோ கார்பன் உற்பத்திக்காக ஆழ்குழாய் கிணறுகளை அமைத்தால் வளமான காவிரி படுகை பகுதியில் விவசாய மக்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகும் என்பதால், இந்தப்படுகை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் ஹைட்ரோ கார்பன் உற்பத்தி செய்ய ஆழ்குழாய் கிணறுகளை அமைக்கக்கூடாது என்பது தமிழ்நாடு அரசின் உறுதியான கொள்கையாகும்.

மத்திய அரசு ஏலம் விட்டாலும் ஹைட்ரோ கார்பன் ஆய்வு மற்றும் உற்பத்தி செய்ய தேவைப்படும் அனுமதியினை தமிழக அரசு ஒரு போதும் வழங்காது என்றும் திட்டவட்டமாக கூறியிருக்கிறார்கள். ஒன்று- பாதிப்பு இல்லாத நலம் பயக்கும் திட்டமாக இருந்தால் அதுபற்றி ஆதாரப்பூர்வமாக மக்கள் மத்தியில் விளக்கி அவர்களை சம்மதிக்க வைக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் மக்களும், மாநில அரசும் விரும்பாத ஒரு திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த முனைவது விரும்பத்தகாத நிகழ்வுகளுக்குத் தான் வழிவகுக்கும்.

தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பொறுப்பேற்றார்



புதுடெல்லி, ஜூன் 16

டெல்லிக்கான தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதியாக ஏ.கே.எஸ்.விஜயன் நியமிக்கப்பட்டார். இவர் முன்னாள் எம்.பி. ஆவார். இந்த நிலையில் டெல்லி வைகை இல்லத்தில் தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதியாக ஏ.கே.எஸ்.விஜயன் பொறுப் பேற்று கொண்டுள்ளார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் துரை முருகன், திமுக எம்.பிக்கள் பங்கேற்றனர்.

விரைவில் கோவில்கள் திறக்கப்படும்: அமைச்சர் சேகர் பாபு

திருச்சி, ஜூன் 16

தமிழகத்தில் பொது ஊரடங்கு அமலில் உள்ளது. தளர்வுகள் அறிவிக்கப்பட்டாலும் பொது போக்குவரத்து அனுமதிக்கப்படவில்லை. வழிபாட்டு தலங்களில் பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் திருச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறும்போது, விரைவில் பக்தர்களின் வழிபாட்டுக்காக கோவில்கள் திறக்கப்படும் என்று தெரிவித்தார். திருச்சி மலைக்கோட்டை உச்சிபிள்ளையார் கோயிலில் ரோப் கார் சேவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

'தாய்மார்களின் சிரிப்பே அரசின் சிறப்பு'-மு.க.ஸ்டாலின்

சென்னை ஜூன்.16

ஏழைத் தாய்மார்களின் சிரிப்பே, தமது அரசின் சிறப்பு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் கொரோனா இரண்டாவது தவணை நிவாணத் தொகையாக அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.2,000, 14 பொருள்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பும் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான டோக்கன்கள் ஏற்கெனவே விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இந்த டோக்கன்களில் செவ்வாய்க்கிழமை பொருள்களைப் பெற வேண்டியவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் சமூக இடைவெளியுடன் வரிசையில் காத்திருந்து வாங்கிச் சென்றனர். அதில், வயதான மூதாட்டிகளும், ரூ.2000 ரொக்கத்துடன், மளிகைப் பொருள்களை மகிழ்ச்சியுடன் பெற்றனர். இந்தப் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவின.

இந்தப் படங்களை தனது முகநூலில் மீண்டும் பதிவிட்டு, மகிழ்ச்சி தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், ஏழைத் தாய்மார்களின் சிரிப்பே, நமது அரசின் சிறப்பு என்று பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

பிளஸ் 2 பொதுத்தேர்வு ரத்து உத்தரவுக்கு இடைக்கால தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு

சென்னை, ஜூன் 16

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வை ரத்து செய்து அரசு பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

தமிழக அரசின் விளக்கத்தை கேட்காமல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வு ரத்து செய்ததை எதிர்த்து ராம்குமார் என்பவர் தாக்கல் செய்த மனுவுக்கு வரும் 23ம் தேதிக்குள் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டது.

நடிகை சாந்தினி பாலியல் புகாரில் வழக்கு:

முன்னாள் அமைச்சர் மணிகண்டன் முன்ஜாமீன் மனு - ஐகோர்ட்டு தள்ளுபடி

சென்னை, ஜூன், ஜூன் 16

நடிகை சாந்தினியை பாலியல் வன்கொடுமை செய்து ஏமாற்றியதாக பதிவான வழக்கில் முன்னாள் அமைச்சர் மணிகண்டன் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அதிமுக ஆட்சியில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக இருந்த மணிகண்டன், தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறியதால் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒரே வீட்டில் கணவன் – மனைவியாக வாழ்ந்ததாகவும், அந்த காலகட்டத் தில் 3 முறை கருவுற்ற போது, தன்னை கட்டாயப்படுத்தி கருவைக் கலைக்கச் செய்தார் எனவும் நடிகை சாந்தினி காவல் ஆணையரிடத்தில் புகார் அளித்தார்.

தற்போது திருமணம் செய்ய மறுப்பதுடன், அவருடன் இருந்தபோது எடுத்த புகைப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டு விடுவதாக மிரட்டுவதாகவும் பாதிக்கப்பட்ட நடிகை சாந்தினி புகாரில் தெரிவித்து இருந்தார்.

இந்தப் புகாரின் அடிப்படையில், அடையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், முன்னாள் அமைச்சர் மணிகண்டன் மீது பாலியல் பலாத்காரம், பெண்ணின் அனுமதியின்றி கருக்கலைப்பு செய்தல், தாக்குதல், காயம் உண்டாக்குதல், ஏமாற்றுதல், பாலியல் வன்கொடுமை, கொலை மிரட்டல் ஆகிய இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழும், தகவல் தொழில்நுட்பச் சட்டப் பிரிவுகளின் கீழும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தான் கைது செய்யப்படாமல் இருக்க முன் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்னாள் அமைச்சர் மணிகண்டன் மனுத்தாக்கல் செய்திருந்தார். தனக்கு எதிராக கூறும் குற்றச்சாட்டுக்களுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், பணம் பறிக்கும் நோக்கில் நடிகை செயல்படுவதாகவும் மனுவில் தெரிவித்திருந்தார். மணிகண்டனுக்கு, முன்ஜாமீன் வழங்கக்கூடாது என நடிகை ஆட்சேபித்து இடையீட்டு மனுத் தாக்கல் செய்திருந்தார். திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லை எனவும், மூன்று முறை கருத்தரித்தபோது கட்டாயப்படுத்தி கருக்கலைப்பு செய்ததாகவும் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

முன் ஜாமீன் மனு, நீதிபதி அப்துல்குத்தூஸ் அமர்வில் விசாரிக்கப்பட்டு வருகிறது. முந்தைய விசாரணையின் போது, பாலியல் வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர் மணிகண்டனை கைது செய்ய வேண்டிய அவசியம் உள்ளதாகவும், காவலில் வைத்து விசாரிக்க வேண்டியுள்ளதால் முன் ஜாமீன் தரக்கூடாது என்றும் காவல்துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்து இருந்தது.

காவல் துறையின் கோரிக்கையை ஏற்றும் சாந்தினியின் இடையீட்டு மனுவை ஏற்றுக் கொண்டும் நீதிபதி அமர்வு, முன்னாள் அமைச்சர் மணிகண்டனின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து மணிகண்டன் விரைவில் கைது செய்யப்படலாம் என தெரிகிறது.

யூரோ கோப்பை கால்பந்து:

போலந்தை வீழ்த்தி ஸ்லோவாக்கியா அசத்தல்

பீட்டர்ஸ்பர்க், ஜூன் 16

யூரோ கோப்பை கால்பந்து தொடரின் லீக் சுற்றில் ஸ்லோவாக்கியா அணி 2–1 என்ற கோல் கணக்கில் போலந்து அணியை வென்றது. ரஷ்யாவின் செயின் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடந்த ஈ பிரிவு லீக் ஆட்டத்தில் போலந்து – ஸ்லோவாக்கியா அணிகள் களம் கண்டன. இரு அணிகளுமே தாக்குதல் ஆட்டத்தில் கவனம் செலுத்தி எதிரெதிர் கோல் பகுதியை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தன.

அப்படி ஒரு முயற்சியில் ஸ்லோவாக்கியா வீரர் அடித்த பந்தை போலந்தின் வொஜ்சிச் சிசென்ய் தடுக்க முயன்றபோது அது கோலானது. 18வது நிமிடத்தில் கிடைத்த இந்த கோலால் முதல் பாதியில் ஸ்லோவாக்கியா முன்னிலை பெற்றது. தொடர்ந்து 2வது பாதியின் முதல் நிமிடத்திலேயே (46') போலந்தின் கரோல் லிஜெட்டி கோல் அடித்து ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டு வந்தார். கோல் இயந்திரம் ரபார்டோ லெவாண்டொவ்ஸ்கியின் முயற்சிகள் போலந்துக்கு கை கொடுக்கவில்லை.

அதே நேரத்தில் ஸ்லோவாக்கியாவின் மிலன் ஸ்க்ரினியர் 69வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து அணிக்கு முன்னிலையை தந்தார். அதே நிலை கடைசி வரை நீடிக்க ஸ்லோவாக்கியா 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியை சுவைத்தது.

செவில்லா நகரில் நடந்த மற்றொரு ஈ பிரிவு ஆட்டத்தில் ஸ்பெயின் – ஸ்வீடன் அணிகள் மோதின. அந்த ஆட்டம் கோல் ஏதுமின்றி சமனில் முடிந்தது.

முன்னதாக கிளாஸ்கோவில் நடந்த டி பிரிவு ஆட்டம் ஒன்றில் செக் குடியரசு அணி 2–0 என்ற கோல் கணக்கில் ஸ்காட்லாந்து அணியை வீழ்த்தியது.

முதல்வர் ஸ்டாலினுடன் அற்புதம்மாள் திடீர் சந்திப்பு

சென்னை, ஜூன் 16

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கிய பேரறிவாளன் உட்பட 7 பேரை விடுவிக்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை எழுந்து வருகிறது. அவர்கள் 30 ஆண்டுகளாக சிறை தண்டனை அனுபவித்து விட்டதால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கிறது. குறிப்பாக, பேரறிவாளனை மீட்டெடுக்க அவரது தாயார் அற்புதம்மாள் பல ஆண்டுகளாக சட்டப் போராட்டம் நடத்தி வரும் நிலையில், அவருக்கு ஆதரவாக சினிமா பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் பலர் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் இன்று தலைமை செயலகத்தில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பேசினார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அற்புதம்மாள், பேரறிவாளனுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதாக மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அவனுக்கு பரோல் தர வேண்டும் என முதல்வரிடம் மனு கொடுத்தேன். உடனடியாக முதல்வர் 30 நாட்கள் பரோல் கொடுத்தார். அதற்காக நன்றி சொல்வதற்காக தான் நான் இன்று தலைமைச்செயலகத்தில் முதல்வரை சந்தித்தேன் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், எழுவர் விடுதலையை சீக்கிரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தேன். கண்டிப்பாக செய்கிறேன் என முதல்வர் உறுதி அளித்தார். நீங்கள் என்ன உணர்வோடு இருக்கிறீர்களோ அதே உணர்வோடு தான் நானும் இருக்கிறேன் என்று முதல்வர் சொன்னார் என்றும் தெரிவித்தார்.